# IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI
# CASE NO: OS.244/2024
# DEPOSITION OF WITNESS: DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | கோபால் | Caste/ஜாதி | | |
| Father's/Husband's Name தந்தை/கணவர் பெயர் | : | சின்னப்பா பிள்ளை | Calling/ தொழில் | | |
| Village/கிராமம் | : | வந்தவாசி டவுன் | Religion/ சமயம் | | |
| Taluk/தாலுக்கா | : | வந்தவாசி | Age/வயது | | 61 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 6th day of February 2025.

**முதல் விசாரணை**

நான் வந்தவாசி டவுனில் வசிக்கிறேன். நான் வழக்கின் பிரதிவாதி ஆவேன். வாதியை தெரியும். முதல் விசாரணைக்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். படித்துபார்த்து கையொப்பம் செய்தேன். கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

**பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யும் ஆவணங்கள்**

1. 26.02.1976 ம் ஆண்டு 1-ம் பிரதிவாதியின் தகப்பனார் சின்னப்பா பிள்ளை என்பவர் தாவா சொத்தை ஒரு பத்ராஜல செட்டியாரிடமிருந்து கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் உண்மை நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும்.

2. 01.06.2017 ம் தேதி 1-ம் பிரதிவாதியின் உடன்பிறந்த சகோதரியான ராஜேஸ்வரி என்பவர் 1-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.2 ஆகும்.

3. 1-ம் பிரதிவாதியின் தகப்பனார் சின்னப்பா பிள்ளை கடந்த 06.05.2014 ம் தேதியில் இறந்ததற்காக இறப்புச்சான்று பி.வா.சா.ஆ.3 ஆகும்.

4. ராஜேஸ்வரி என்பவர் 06.12.2017 தேதியில் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் பி.வா.சா.ஆ.4 ஆகும்.

வழக்கை தள்ளுபடி செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

ஓம்/- எஸ்.சரண்யா
சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.